**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO- 258/2024**
**Dated :26.11.2025**
**Deposition of witness for : P.W.2**

**Chief Examination of PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ்வரன் | வயது | : | 36 |
| தந்தை பெயர் | : | ராஜேந்திரன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | ஆதனக்கோட்டை | தொழில் | : | கிளை மேலாளர் சிட்டி யூனியன் வங்கி |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Accused present. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)
**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**
**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது சிட்டி யூனியன் வங்கி ஆதனக்கோட்டை வங்கி, ஆதனக்கோட்டை கிளையில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அகஸ்தியா என்பவரின் வங்கி கணக்கு எண் 500101010948653 என்ற வங்கிக்கணக்கின் 05.09.2018 ஆம் தேதியில் இருந்து 07.02.2023 ஆம் தேதி வரையிலான வங்கிக்கணக்கு அறிக்கையினை எடுத்து வந்துள்ளேன். அதனை தாக்கல் செய்கிறேன்.

**(மேற்படி வங்கிக்கணக்கு அறிக்கை சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை மேற்படி வங்கிக்கணக்கிற்கு வழங்கப்பட்டது தான். வங்கிக்கணக்கு வைத்திருக்கும் அகஸ்தியா என்பவரால் பணம் செலுத்துவதை நிறுத்திவைக்கும்படி அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வங்கிக்கணக்கு சேமிப்பு கணக்கு ஆகும். மேற்படி வங்கிக்கணக்கு தற்போது நடைமுறையில் இருந்து வருகிறதா என்றால் இல்லை, 07.02.2023 ஆம் தேதி வங்கிக்கணக்கு முடிக்கப்பட்டுள்ளது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) பொதுவாக வங்கிக்கணக்கில் பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வங்கிக்கணக்கு முடிக்கப்படும் என்றால் வங்கிக்கணக்கு வைத்திருப்பவர் கொடுக்கும் வேண்டுகோளின் அடிப்படையில் முடிக்கப்படும். அவ்வாறு வங்கிக்கணக்கு முடிக்கப்பட்டால், கணக்கில் இருக்கும் பணம் அவருக்கு வழங்கப்படும். பொதுவாக காசோலை மோசடியாக பயன்படுத்தப்படலாம் என்பதன் பேரில் வாடிக்கையாளரால் வங்கிக்கணக்கை முடித்து வைக்க கோரப்படும் என்றால் சரிதான், அதுவும் ஒரு காரணமாக கூறப்படும். 03.06.2024 ஆம் தேதிக்கு முன்பாகவோ, பின்பாகவோ மேற்படி அகஸ்தியா என்பவரின் வங்கிக்கணக்கிற்கு காசோலை புத்தகம் புதிதாக கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்படவில்லை, 2018 ஆம் ஆண்டு காசோலை புத்தகம் கொடுக்கப்பட்டது.

2) 03.06.2024 தேதிக்கு முன்பாக மேற்படி நபரின் வங்கிக்கணக்கில் பணம் இருந்திருந்தாலும் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. பொதுவாக நடப்புக்கணக்குகள் பெரிய வியாபாரிகளால் மட்டுமே தொடங்கப்படும் என்றாலும் ரூ.2,00,000/- அளவிற்கு அந்த கணக்கில் தான் வரவு செலவு செய்யப்படும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**